# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## அத்தரகல்ல ஐக்கிய பிரஜைகளுக்கான அபிவிருத்தி அமைப்பு (கூட்டிணைத்தல்)

**அத்தரகல்ல ஐக்கிய பிரஜைகளுக்கான அபிவிருத்தி அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மயந்த திசாநாயக்க அவர்களால் 2015, திசெம்பர் மாதம் 15 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, நவெம்பர் மாதம் 23 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது*

---

**[ 55 ஆம் சட்டமூலம் ]**

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 13.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**அத்தரகல்ல ஐக்கிய பிரஜைகளுக்கான அபிவிருத்தி அமைப்பு (கூட்டிணைத்தல்)**

## அத்தரகல்ல ஐக்கிய பிரஜைகளுக்கான அபிவிருத்தி அமைப்பை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

"அத்தரகல்ல ஐக்கிய பிரசைகளுக்கான அபிவிருத்தி அமைப்பு" என்றழைக்கப்படும் நிலையமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நிலையத்துடன் தொடர்புபட்ட எல்லா குறிக்கோள்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருந்தாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட நிலையமானது, எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, அத்தரகல்ல ஐக்கிய பிரஜைகளுக்கான அபிவிருத்தி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்

*அத்தரகல்ல ஐக்கிய பிரஜைகளுக்கான அபிவிருத்தி அமைப்பைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதன்பின்னர் "நிலையம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்தரகல்ல ஐக்கிய பிரஜைகளுக்கான அபிவிருத்தி அமைப்பின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதற்குப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்தரகல்ல ஐக்கிய பிரசைகளுக்கான அபிவிருத்தி அமைப்பு என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்டு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாயிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்ட எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடக்கலாமென்பதோடு அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

**3**. கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள் :

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(1) இவ் அமைப்பின் நோக்கு, பொதுக் குறிக்கோள்கள், பொதுக் கொள்கைகள், மற்றும் அபிவிருத்தித்திட்டங்கள் இலங்கைக்குள் வாழும் மக்களை மையமாகக் கொண்டு சுயமாகவும், சமூகமாகவும் வளர்ச்சிபெறுவதும் மக்களின் ஒத்தாசையுடன் அவை நடைமுறைப் படுத்தலும் ;

(2) இலங்கையினுள் செயல்படுகின்ற வெவ்வேறு நிறுவனங்கள், கம்பெனிகளுக்கு அவசியமான வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்குதலும் ;

(3) கீழ் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தேவைகளை நிரப்புவதற்காக அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்:

(அ) சுற்றாடல் ;
(ஆ) நீர் ;
(இ) உடை ;
(ஈ) உணவு ;
(உ) வீடு ;
(ஊ) சுகாதாரம் ;
(எ) கல்வி ;
(ஏ) கலாசாரமும் மற்றும் சமய அறிவும்.

(4) மதங்களினூடாக சிறந்த நாடொன்றை உருவாக்கல் ;

(5) சுற்றாடல் பாதுகாப்பு, சுற்றாடல் மாசடைவதைத் தடுத்தல் என்பவற்றிற்கான வேலைத்திட்டங்களை செயற்படுத்தல் ;

(6) இலங்கையினுள் செயற்படும் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல்.

**4**. அமைப்பின் உறுப்பினர்கள் கீழ்காணும் பொதுவான கொள்கைகளை ஏற்று பின்பற்றுவதற்கு முயற்சிசெய்தல் :

கூட்டுத்தாபனத்தின் கொள்கைகள்.

(i) சகல சந்தர்ப்பங்களிலும் உண்மை, அஹிம்சை மற்றும் மனச்சாட்சியை பின்பற்றுதல் ;

(ii) அமைப்பின் பரிசுத்தத்தை பாதுகாப்பதன்மூலம் அரசியல் கட்சி உறவுகள் என்பவற்றுடன் தொடர்பை புறக்கணித்தல் ;

(iii) அமைதியான வாழ்க்கை வாழ உதவுதல் ;

(iv) தனிப்பட்டரீதியாக பணம் சேர்த்தல், போட்டி, வைராக்கியம், ஆசை ஆகியவற்றை புறம்தள்ளி அதற்குப் பதிலாக பொது உரிமை, ஒத்துழைப்பு, இரக்கம் நிறைந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முயற்சிசெய்தல் ;

(v) நிறுவனத்தின், அமைப்பின் கொள்கைகளை பூர்த்தி செய்துகொள்வதற்காக உபயோகப்படுத்திக்கொள்ளும் மார்க்கம் பரிசுத்தமானதாக இருக்க முயற்சித்தல் ;

(vi) எங்களது கலாசார உரிமைகள் அன்பு, கருணை மத்தியஸ்தம், நடுநிலை எனும் நாற்குணங்களின் அடிப்படையில் கொண்ட, அன்பான வார்த்தைகள், ஆசீர்வாதம் போன்ற நற்பண்புகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையை தர்மத்தீவாக உருவாக்குவதற்கு செயல்படுதல் ;

(vii) அங்கத்துவம்பெற்றுள்ள நிறுவனங்களுள் நிர்வாகிகளுடைய தீர்மானங்களுக்கு மதிப்பளித்தலை ஏற்றுக்கொள்வதுடன் மற்றும் இத்தீர்மானங்களுள் ஓர் அங்கத்தவருக்கு அங்கத்துவம் புறக்கணிக்கப்படும்போது சுயவிருப்பத்துடன் விலகிக்கொள்ள தான் ஒத்துக்கொள்ள வேண்டும் ;

(viii) அங்கத்துவம், அரசியல் ஒழுக்கமானவகையில் கிராம, நகரங்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான அறிவுறுத்தல்களை கவனத்திற்குகொள்ளல் ;

(ix) விஞ்ஞான அறிவு, படிப்பறிவு சமநிலையில் இருக்கும் கிராமிய நாகரீகம்கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்குதல் ; அத்துடன்

(x) இலங்கையில் வெவ்வேறு நிறுவனங்களுக்கு முன் மாதிரியான அளவில் ஒற்றுமையாகக்கூடி கலந்துரையாடி அமைப்பின் வேலைகளை நிறைவுசெய்தல்.

**5**. அங்கத்துவம் — கூட்டுத்தாபனத்தின் அங்கத்துவம்.

(1) அமைப்பின் அங்கத்துவம் வரையறுத்தது ஆகும்.

(2) இச்சபையின் நிர்வாகக்குழு அரசாங்க அதிகாரிகளுக்கும் அமைய குருமாருக்கும் அங்கத்துவம் கொடுக்கப்படும்.

(3) அங்கத்துவத்திற்காக விண்ணப்பிக்கும் அங்கத்துவப் பணம் செயலாளருக்கு கிடைத்தவுடன் விண்ணப்பதாரிக்கு அங்கத்துவத்தைக் கொடுக்க முடிவுசெய்யப்படும்.

(4) அங்கத்தவருக்கு அங்கத்துவம் கிடைத்தபின் அமைப்பின் குறிக்கோள்கள் சத்தியப்பிரமாணம் செய்ய அனுமதிக்கப்படும்.

(5) அமைப்பின் அங்கத்துவம் ஏற்றுக்கொள்வது, நிராகரிப்பது, அங்கத்துவம் ரத்துசெய்வது ஆகியவற்றை ஏற்று நிர்வாகக்குழுவினருக்கு தலைவருக்கும் அதிகாரம் ;

(6) அங்கத்துவம் பற்றிய விடயங்களில் முடிவெடுப்பதற்கு மகாசபையில் அனுமதிபெற வேண்டும் ;

(7) அங்கத்துவம் 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது, சிறுவர் அங்கத்துவம், இளைஞர் யுவதிகளுக்கான அங்கத்துவம், சாதாரண அங்கத்துவம், நிரந்தர அங்கத்தவர்கள் மற்றும் வரவேற்கும் அங்கத்தவர் என்பனவாகும்.

(8) ஏழு வயது பூர்த்தியடைந்த ஆனாலும், 14 வயது பூர்த்தியடையாத நபர்கள் சிறுவர் அங்கத்தவர்களாகும். 14 வயது பூர்த்தியடைந்த ஆனாலும், 26 வயது பூர்த்தியடையாத நபர்கள் இளைஞர் யுவதிகளுக்கான அங்கத்தவர்களாகும். 26 வயது தாண்டிய அனைத்து நபர்களும் சாதாரண அங்கத்தவர்களாகும். (V) ஆகிய சட்டரீதியின்பிரகாரம் தீர்மானிக்கப்பட்டுள்ள அங்கத்துவப்பணம் கொடுக்கும் நபர்கள் 6(iv) நிரந்தர அங்கத்துவமாகும். வரவேற்பைப்பெறும் நபர்கள் வரவேற்கத்தக்க அங்கத்தவர்களாகும் ;

(9) எந்த அங்கத்தவரும் தனிப்பட்டமுறையில் எந்த பிரயோசனமும் பெறமுடியாது ;

**6**. அங்கத்துவக்கட்டணம் - கூட்டுத்தாபனத்தின் அங்கத்துவ கட்டணம்.

(i) சிறுவர் அங்கத்துவத்திற்கு வருடம் ஒன்றுக்கு 1.00 ரூபா.

(ii) இளைஞர் யுவதிகளுக்கான அங்கத்துவத்திற்கு வருடம் ஒன்றுக்கு 6.00 ரூபா.

(iii) சாதாரண அங்கத்துவத்திற்கு வருடம் ஒன்றுக்கு 24.00 ரூபா.

(iv) ஒரேமுறையில் 240.00 ரூபா கட்டுவதன் மூலமாகவோ அல்லது அங்கத்துவம்பெற்ற நாள் தொடக்கம் ஒரு வருடத்திற்குள் மூன்று தவணைகளுக்குள் அப் பணத்தை செலுத்தும் அங்கத்தவர்கள் நிறைந்த அங்கத்தவர்களாகும்.

(v) அங்கத்தவர்கள் அங்கத்துவப் பணம் செலுத்துவதற்கு கட்டுப்பட்டிருந்தாலும் தன்னுடைய விருப்பத்தின்படி நிறுவனத்திற்கு அன்பளிப்பு செய்யலாம்.

(vi) சிறுவர், இளைஞர் மற்றும் சாதாரண வகுப்பிற்குரிய அங்கத்தவர்கள் ஒவ்வொரு புதுவருடத்திற்கும் நியமித்த அங்கத்துவப்பணத்தை சனவரி 31 ஆம் திகதிக்கு முன் செலுத்தி அங்கத்துவத்தை புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

(vii) அமைப்பைவிட்டு விலகும்போது அங்கத்துவக்காலத்தில் செலுத்திய பணம் திரும்பவும் பெற்றுக்கொள்ள முடியாது.

**7**. அங்கத்துவப்பத்திரம் - அங்கத்துவப் பத்திரம்.

(1) அங்கத்தவரின் பெயர், அங்கத்துவ வகுப்பு, நிரந்தர முகவரி, அங்கத்துவம் பெற்றுக்கொண்ட திகதி,

(2) அங்கத்துவம் இல்லாமல் போன திகதி மற்றும் செயலாளருக்குதேவைப்படும் தகவல் அனைத்தும் அடங்கியது இப்பத்திரமாகும்.

**8**. நிர்வாகக்குழு -

*கூட்டுத்தாபனத்தின் நிர்வாகக் குழு.*

(1) வருடாந்த மகாசபை கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் அந்தந்த வகுப்புகளுக்கு அங்கத்தவர்கள் 15 பேருக்கு குறைவான சபை நிர்வாகம் செய்யவேண்டும் ;

(2) நிர்வாகக்குழு கீழ்க்காணப்படும் முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும்.

(அ) சிறுவர் அங்கத்தவர்கள் இருவர் ;

(ஆ) இளைஞர் அங்கத்தவர்கள் மூவர் ;

(இ) சாதாரண அங்கத்தவர்களுள் தாய்மார் மூவர்;

(ஈ) அமைப்பின் மகாசபையில் சமய குருமார், சாதாரண, நிரந்தர மற்றும் வரவேற்கத்தக்க அங்கத்தவர்களுக்குள் தேர்ந்தெடுக்கப்படும் வயதுவந்தவர்களில் அறுவர் ;

(உ) சாதாரண அல்லது இளைஞர் அங்கத்தவர்களுக்குள் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தவர் மூவர் ;

(3) மகாசபையின் வாக்கெடுப்பின்போது மூன்றில் இரண்டு பங்கிற்கு மேல் வாக்களிப்பின் நிர்வாகக் குழுவில் அங்கத்தவர் ஒருவர் அமைப்பின் பொதுவான குறிக்கோள்களுக்கு விரோதமாக செயல்படும்போது அங்கத்துவத்தில் இருந்து நீக்கப்படும். அந்த அங்கத்தவர் சம்பந்தமாக மகாசபையில் எடுக்கப்படும் முடிவே இறுதிமுடிவாகும்.

**9**. நிர்வாகக்குழுவின் சட்டவிதிகள் -

*நிர்வாகக் குழுவின் சட்ட விதிகள்.*

(1) அமைப்பின் நிர்வாகக்குழு குறைந்தது மாதத்திற்கு ஒருமுறையாவது கூட வேண்டும்.

(2) நிர்வாகக்குழுவின் கூட்டத்தின்போது குறைந்தது **7** அங்கத்தவர்கள் இருக்கவேண்டும்.

(3) மகாசபைக்கூட்டம் முடிவடைந்த திகதியிலேயே நிர்வாகக்குழுவில் முதல் கூட்டத்தை நடத்தி அமைப்பின் தலைவர், செயலாளர், பொருளாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(4) அமைப்பின் சாதாரண நிருவாகங்களைப்பற்றிய எல்லா முடிவுகளையும் எடுக்கும் உரிமை தலைவருக்கே உண்டு

(5) நிர்வாகக்குழுவின் மூலமாக சபைக்கூட்டத்திற்காக மாதத்தில் தகுந்த தினத்தை தீர்மானிக்க வேண்டும்.

(6) மூன்று நாட்களுக்கு முன் எழுத்துமூலமாக தெரிவித்ததின் பின் நிர்வாகக்குழுவின் கூட்டம் நடத்தப்படும்.

நிர்வாகக் குழுவின் தத்துவங்கள்.

**10**. நிர்வாகக்குழுவின் அதிகாரமும், கடமைகளும் -

(1) அமைப்பின் நோக்கங்களுக்காக அவசியமான கட்டிடங்களை வாங்குதல், கையேற்றல், வாடகைக்கு எடுத்தல், கட்டுதல் என்பன.

(2) மன்றத்தின் உபயோகத்திற்காக கட்டிடம், காணி, உபகரணங்கள் பணத்தினால் அல்லது வங்கிக்கடன்மூலம் பெறல்.

(3) அமைப்பின் நோக்கத்திற்காக திட்டங்களை செயற்படுத்தல்.

(4) அமைப்பின் அங்கத்தவர்களை சேர்த்துக்கொள்வதும் அவர்களின் அங்கத்துவத்தை ரத்துச்செய்தலும்.

(5) அதிகாரிகளுக்கு வேலைகள் பகிர்ந்துகொடுத்தலும் அவர்களின் ஒழுக்காற்றலை நிர்வகிப்பதும்.

(6) நிர்வாகக் குழுவின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய வெற்றிடங்களை நிரப்புதல்.

(7) உபசபை அமைத்து அதற்கான வேலைகளை நியமிப்பது.

(8) சங்கங்கள்மூலமாக செயல்படும் கிராமிய வேலைகளை ஒழுங்குசெய்தல் மற்றும் இவ்வேலைகளுக்காக முழு நேரவேலை ஆட்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்கள், சமையல் அறை வேலையாட்கள், சுகாதார வேலை யாட்கள் மற்றும் கிராமிய வேலையாட்களை நியமிப் பதும் ரத்துசெய்தலும்.

(9) பிரதான செயலாளர்மூலமாக நிறுவனத்தின் ஆவணங் களை பாதுகாத்துக்கொள்வதும் பராமரிப்பதுமாகும்.

(10) நிறுவனத்தின் கணக்குகளைப் பரீட்சிப்பதற்காக கணக் காய்வாளர் ஒருவரை நியமிக்கப்படவேண்டும்.

(11) மகாசபைக் கூட்டத்தின்போது வருடாந்த கணக் கறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

(12) சங்கங்களுடன் இணைந்துசெயலாற்றுதலும் ;

(13) அமைப்பின் வருடாந்த மகாசபை கூட்டம் விஷேட சாதாரண மகாசபை கூட்டத்தினைக் கூட்டுவதற்கு செயலாளருக்கு அறிவித்தல்.

**11.** பணிப்பாளர் சபையின் கடமைகள் -

பணிப்பாளர் சபையின் கடமைகள்.

(1) தலைவர்,

(i) சபையில் முன்னுரிமைவகித்தல் ;

(ii) சங்கத்தின் சகல வேலைகளையும், பரிசோதித் தலும் செயற்படுத்துதலும் ;

(iii) நிர்வாகக்குழுவின் தீர்மானங்களை மகாசபை கூட்டத்தில் முன்வைத்தல்.

(iv) நிர்வாகக்குழுவின் தீர்மானத்தின்படி அங்கத்த வர்களை விலக்குதல்.

*(2) செயலாளர்,*

(i) *வருடாந்த மற்றும் மகாசபை கூட்டம் நிர்வாகக்குழுக் கூட்டத்தை அமைத்தல், அமைப்பின் நிர்வாகக் குழுவின் அறிக்கையினை நடைமுறைப்படுத்தல், அமைப்பின் படிவங்களில் கையொப்பமிடுதல் ;*

(ii) *அமைப்பின் எல்லா கடிதங்களையும் தன்னுடைய கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதும் அதனை பாதுகாப்பதும்.*

(iii) *ஒவ்வொரு வருடமும் யூன் 30 ஆம் திகதிக்கு முன் அமைப்பின் அங்கத்தவர்களைப் பற்றிய தகவல்களை சங்கத்தின் பதிவாளருக்கு சமர்ப்பித்தல்.*

*(3) பொருளாளர்,*

(i) *அமைப்பின் எல்லா பணங்களையும் பாதுகாப்பதும் நிர்வாகக்குழுவின் தலைவரின் கட்டளையின்படி செயற்படுத்தல் ;*

(ii) *வரவு செலவுப்புத்தகங்களை சரியாக பராமரித்தல் ;*

(iii) *அமைப்புக்குரிய அனைத்து உபகரணங்களைப் பற்றியும் பதிவுகளை வைத்துக்கொள்ளல் ;*

(iv) *அமைப்பின் அனைத்துப் பணங்களும் நிர்வாகக்குழு அனுமதிக்கப்பட்ட வங்கியில் வைப்பிலிருத்தல் ;*

(v) *அமைப்பின் கணக்குகள் கணக்காளர்மூலமாக பரிசீலனைசெய்து வருடாந்த கணக்கு அறிக்கையை நிர்வாகக்குழுவிற்கும் மகாசபைக்கும் சமர்ப்பித்தல் ;*

(vi) *கணக்கறிக்கை ஒவ்வொரு வருடமும் யூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன் சங்கப்பதிவாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் ;*

**12**. உபசபையினை தெரிவுசெய்தல் -

கூட்டுத்தாபனத்தின் உபசபையை நியமித்தல்.

தேவைப்பட்ட எந்நேரத்திலும் கீழ்காணப்படும் வேலைத் திட்டங்களுக்காக உபசபை அமைப்பதற்கு தலைவருக்கும் நிர்வாகக்குழுவிற்கும் அதிகாரம் இருக்கவேண்டும்.

(அ) சிரமதானம், முகாம் கல்விக்கருத்தரங்கு, சேமிப்பு, கடன் கொடுக்கல்வாங்கல், வியாபாரம், கண்காட்சி, சிறுவர் நலன் அமைப்பு, கல்விச் சுற்றுலா, மரநாட்டு வியாபாரம், வீட்டுத்தோட்டச் செய்கை, செயற்றிட்டம் பொருளாதார அபிவிருத்தித்திட்டம் ஆகும்.

(ஆ) அங்கத்தவர் ஒருவர்மூலமாக குற்றஞ்சாட்டப்பட்ட தவறான நடத்தையைக்கொண்ட ஒருவர் அமைப்பை தேவையற்றமுறையில் பயன்படுத்தினார் என்ற முறைப்பாடுகளை விசாரணைசெய்தல் ;

(இ) அமைப்பின் குறிக்கோள்களுக்கு அமைவாக கருமமாற்றல் ;

(ஈ) உபசபைக்கு குறைந்தது நிர்வாக சபையில் அங்கத்தவர் மூலமாக மூன்று பேர் அடங்கவேண்டும். மற்றவர்கள் அங்கத்தவர்மூலமாக நியமிக்கப்படும்.

(உ) தேவைப்பட்ட நேரங்களில் உபசபை ஒன்றை கலைத்து அதற்குப்பதிலாக புதிய உபசபை ஒன்றை நியமிப்பதற்கு தலைவருக்கும் நிர்வாகக்குழுவிற்கும் அதிகாரம் உண்டு.

**13**. அமைப்பின் மகாசபைக் கூட்டம் -

கூட்டுத்தாபனத்தின் மகாசபை.

(1) கீழ்காணும்படி மகாசபைக் கூட்டம் மூன்று வகைப் படும்.

(2) வருடாந்த மகாசபைக் கூட்டம், அமைப்பின் தலைவர் மற்றும் நிர்வாகக்குழுவின் முடிவின்படி தலைவரின் மூலமாக அழைக்கப்படும் விசேட கூட்டமாகும்.

(3) அமைப்பின் நிர்வாகக்குழுவின் அனுமதி மற்றும் குழுவின்படி நடத்தப்படும் விசேட மகாசபை கூட்டத்தின் வேலைத்திட்டங்களுக்கான யாப்புரீதியிலான கலந்தாலோசித்தல், மீளக்கலந்தாலோசித்தல் அல்லது யாப்பு விடயங்களைப் புதுப்பித்தல்.

(4) அமைப்பின் நிர்வாகக்குழுவின் அங்கத்தவர்கள் 6 பேருக்கு குறைந்த எண்ணிக்கை கொண்டவர்கள் தலைவருக்கு எழுத்துமூலமாக முன்வைக்கப்படும் வேண்டுதல்களை, விசேட மகா சபை கூட்டத்தின் வேலைத்திட்டங்களுக்கு முன்குறிப்பிட்ட காரணங்கள் மட்டும் உள்ளடக்கப்பட்டதாக இருக்கும்.

(5) தலைவர்மூலமாக அல்லது அமைப்பின் நிர்வாகக் குழு மூலமாக அல்லது தேவைப்படுமென்று கருதும் போது சாதாரண மகாசபை கூட்டத்திற்காக வேலைத் திட்டங்களைப் பற்றி கலந்தாலோசிக்கும் முக்கியமான விடயங்கள் உள்ளடங்கும்.

(i) வருடாந்த மகா சபை கூட்டம் ஓகத்து 31 ஆம் திகதிக்கு முன் நடத்த வேண்டும்.

(ii) எல்லா மகாசபை கூட்டங்களுக்கும் தலைவரே முன்னுரிமைபெற வேண்டும்.

(iii) எல்லா மகாசபை கூட்டத்திற்காக அங்கத்தவர்கள் 50 பேர் அல்லது அங்கத்தவர் கூட்டத்தின் மூன்றில் இரண்டு பங்காவது அங்கத்தவர்கள் சமுகமளித் திருக்க வேண்டும்.

(iv) கூட்டத்தில் எல்லா அங்கத்தவர்களுக்கும் மகாசபை களில் அங்கத்துவத்திற்கு தகுதியானவர்களாக இருக்க வேண்டும்.

(v) சகல மகா சபைக் கூட்டங்களுக்கும் 14 நாட்களுக்கு முன்னதாக அறிவித்தல் வழங்கப்பட வேண்டும்

**14.** அமைப்பின் நிதியம் - கூட்டுத்தாபனத் தின் நிதியம்.

(1) அமைப்பிற்கான நிதியம் ஒன்று இருக்கவேண்டும்.

(2) இந்நிதியத்திற்கு

(3) கூட்டுத்தாபனத்தின் நிதியத்தை பயன்படுத்தும்முறை -

(அ) அமைப்பின் நிர்வாகக்குழு மூலமாக சுயதேவைகளை செய்வதற்காகவும், சேவைகளை நிறைவேற்றுவதற் காகவும் செலவிடுதல் ;

(ஆ) அமைப்பின் சேவையாளர்களுக்கான கொடுப்பனவு ;

(இ) அதிகாரிகள் மற்றும் தொண்டர் சேவையாளர்களுக் காக அமைப்பின்மூலமாக சில சில வேலைகளுக்காக செலவிடுதல் ;

(ஈ) தபாற்கட்டணம், தந்தி, தொலைபேசி அழைப்பு மற்றும் அச்சிடல் என்பவற்றிற்காக செலவிடுதல் ;

(உ) நிர்வாகக் குழுமூலமாக ஒதுக்கிவைத்திருக்கும் பணத்தில் நற்காரியங்களுக்காக செலவிடுதல் ;

(ஊ) கணக்காளர்களுக்காக செலவிடுதல் ;

(எ) அலுவலகத்திற்கான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான செலவு ;

(ஏ) அமைப்பிற்கு கிடைக்கும் எல்லா பணங்களையும் அத்தரகல்ல ஸ்ரீ தீராநந்த வங்கியில் அத்தரகல்ல சமூக அபிவிருத்தி அமைப்பு என்ற பெயரில் சேமிக்க வேண்டும். காசோலையினை நிறுவனத்தில் அதிகாரி கள் இருவர்மூலமாக கையொப்பம் இட வேண்டும். அதில் ஒவ்வொரு அதிகாரிகளும் அமைப்பில் பொரு ளாளராக இருப்பதுடன் மற்ற அதிகாரிகள் தலைவர் அல்லது செயலாளராக இருக்க வேண்டும்.

கணக்குகளின் கணக்காய்வு.

**15.** (1) அமைப்பின் வருடாந்த நிதி ஏப்பிறல் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் குறைந்தபட்சம் ஒவ்வோராண்டிலும் ஒருமுறையாவது பரிசீலனைசெய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்குத் ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது -

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதற்கு கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவனத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமான தனியார் ஒருவர் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைபுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**16.** அமைப்பின் சொத்துக்கள் -

ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின்மீது அல்லது அதன் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக்கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன் அவற்றை விற்க ஈடுவைக்க குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள வில்லங்கத்துவப்படுத்த அல்லது பொறுப்பிக்க உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். சொத்துக்களை விற்பனை செய்வதற்கும் அடகுவைப்பதற்கும் குத்தகைக்குக் கொடுப்பதற்கும் அல்லது எவ்விதத்திலும் வெளிப்படுத்துவதற்கும் அமைப்பிற்கு அதிகாரமுண்டு.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**17.** அமைப்பின் இலச்சினை -

தலைவர், நிருவாகக்குழுவின்மூலமாக தீர்மானம்செய்யும் இலச்சினை ஒன்று அமைப்புக்கு இருக்கவேண்டும். இலச்சினை அமைப்பின் பிரதான செயலாளரின் பொறுப்பில் இருக்க வேண்டும். அமைப்பின் தலைவர், செயலாளர், பொருளாளர்

ஆகிய மூன்று அதிகாரிகளின் இரண்டுபேர் முன்னிலையில் தவிர இலச்சினை எந்த ஒரு பத்திரத்திற்கும் வைப்பதை தவிர்க்க வேண்டும். அவ்வதிகாரிகள் இரண்டு பேரும் சமுகமளித்ததற் கான சாட்சியமாக தங்களது கையொப்பத்தை இடவேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் சட்டரீதிகளை பரிசோதனை செய்தல்.*

**18.** யாப்பினை பரிசோதனை செய்தல் –

(1) அமைப்பின் யாப்பினை பரிசோதனைசெய்வதற்காக அழைக்கப்படும் விசேட மகா சபை கூட்டத்தில் முன்மொழியப் படும் பரிசோதனைகளுக்கு சார்பாக கலந்துகொண்டிருக்கும் அங்கத்தவர்களின் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறைவான வாக்களிப்பில் செயற்படக் கூடாது.

(2) இவைகளை பரிசீலனைசெய்யும்போது அமைப்பின் செயலாளர்மூலமாக அல்லது அவர் சமுகமளிக்காத பட்சத்தில் அச்சபையில் முதன்மைவகிக்கும் நபர்மூலமாக அல்லது விசேட மகாசபை கூட்டத்தின்போது முன்மொழிய வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்களின் பிரச்சினைகள்.*

**19.** அங்கத்தவர்களின் பிரச்சினைகள் –

அமைப்பின் செயல்திட்டங்கள் அல்லது செயற்பாடு சம்பந்தமாக அமைப்பு மற்றும் அதன் அங்கத்தவர்களுக்கிடையே சில பிரச்சினைகள் ஏற்பட்டால் அதை அமைப்பின் செயலாளர் மூலமாக நிருவாகக்குழுவிற்கு முன்வைக்கப்படவேண்டும். அதில் நிருவாகக்குழு மற்றும் தலைவர்மூலமாக கொடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அத்தீர்மானம் எந்த ஒரு நீதிமன்றத்திலும் கேள்வி கேட்க முடியாத சந்தர்ப்பத்தில் அத்தீர் மானத்தை ஏற்றுக்கொண்டு அதன்படி செயற்படுவதற்கு அங்கத் தவர்கள் கடமைப்பட்டுள்ளனர்.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பாதுகாத்தல்.*

**20.** இச்சட்டத்தின் குறிப்பிடப்பட்டுள்ளோரின் அல்லது அவர்கள்மூலம் அல்லது அவர்களால் அல்லது அவர்களின்கீழ் உரித்துள்ளோரின் உரிமைகள் தவிர குடியரசின் அல்லது ஏதேனும் அரசசபை அல்லது கூட்டுத்தாபனத்தின் அல்லது வேறு நபர்களின் உரிமைகளுக்கு இச்சட்டத்தில் உள்ளடங்கி இருக்கும் எதனாலும் பாதிப்போ அல்லது அச்சுறுத்தலோ ஏற்படக்கூடாது.

*ஒவ்வாமையின்போது சிங்கள உரை மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

**21.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*